முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி பி.கவிதா, பி.ஏ.,எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 நாள்.04.09.2023

| MCOP. No. | 223/2018 | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகாந் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது, விபத்தை பற்றி கேள்விப்பட்டு தான் சென்றேன். விபத்து நடந்த போது எனக்கு திருமணம் திருமணம் ஆகவில்லை. எனக்கு 2019ல் திருமணம் நடைபெற்றது. 3ம் மனுதாரருக்கு விபத்து காலத்தில் திருமணம் நடந்துவிட்டது. 2ம் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் திருமணம் ஆகவில்லை. விபத்து சமயத்தில் எனது அப்பா அரசு போக்குவரத்து கழக பேருந்தில் பயணம் செய்தார். இந்த விபத்து சம்பந்தமாக எந்த பேருந்தின் மீது முதல் தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. நான் புதுசேரி மாநில போக்குவரத்து கழகத்தில் இருந்து தான் மனு கோரிக்கை வாங்கி கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையானது விபத்தை ஏற்படுத்திய பி.ஆர்.டி.சி ஓட்டுநர் புகார் கொடுத்து தான் பதிவு செய்யப்பட்டுள்ளது ஏன்றால் சரியல்ல. அதனால் நான் எதிர்மனுதாரர் கழகத்தில் இழப்பீடு பெற முடியாது என்றால் சரியல்ல.